**இலங்கை கிரிக்கெட் – 2016**

**-----------------------------------------------------------**

இலங்கை கிரிக்கெட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியமாற்றங்களிற்கான விரிவான வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுகள் அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை கிரிக்கெட் அலுவல்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான நிறைவேற்று சபையின் பொறுப்பு

**------------------------------------------------------------------------------------------**

இந் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்க்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு நிறைவேற்றுச் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

**-----------------------------------------------**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி இலங்கை கிரிக்கெட்டின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிரிக்கெட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்க்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------------------------

**2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ்க்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை கிரிக்கெட்டின் சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதி மீளாய்வுசெய்திருக்காததுடன் நிலையான சொத்துக்களின் உருப்படிகள் மற்றும் குழு உருப்படிகள் நியமங்களின் பிரகாரம் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று கிரிக்கெட் அரங்குகளின் நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,046,800 தொகையான முற்பணக்கொடுப்பனவு சீராக்கம் செய்யப்படாமல் 5 வருடங்கள் காலப்பகுதிக்கு மேலாக முற்பணக் கணக்கில் இருந்தது.

(ஆ) விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு பெறுவது தொடர்பான ரூபா 1,651,002 தொகையான மீள்நிதியளிக்கக்கூடிய வைப்புக்கள் தீர்க்கப்படாமலும் கணக்குகளில் சீராக்கஞ்செய்யப்படாமலும் பத்து வருடங்களுக்கு மேலாக பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

-----------------------------------------------------------------

நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. ஆகையால். நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்களின் பூர்த்தியாக்கல் தன்மை, உரிமையாண்மை, உள்ளதன்மை மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 2.2.4 போதிய அதிகாரத்தால் ஆதரவழிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

1988 ஏப்ரல் 20 இலிருந்து 2028 ஏப்ரல் 19 வரையிலான 30 வருட காலப்பகுதிக்காக காலி சர்வதேச கிரிக்கெட் அரங்கை (ஜீஜசீஎஸ்) குத்தகைக்கு விடுவிப்பதற்காக எஸ்எல்சீயானது காலி மாநகர சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் உடள்படிக்கையானது ஒவ்வொரு 10 வருடங்களுக்கு ஒரு தடைவ புதுப்பிக்க வேண்டும். முதலாவது புதுப்பிப்பானது 2017 ஏப்ரல் 19 ஆக இருந்தபோதும், ஜீஜசிஎஸ் ஆனது உடன்படிக்கையை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்காமல் எட்டு வருடங்களிற்கு மேலாக எஸ்எல்சீயால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் செல்லுபடியாகும் உடன்படிக்கையில்லாமல் ரூபா 10,315,555 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கிரிக்கெட்டின் நிதி விளைவுகள் ரூபா 63,962,186 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 615,947,765 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 551,985,579 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. சர்வதேச கிரிக்கெட்டிடமிருந்தான ரூபா 922,469,968 தொகையான வருமானக் குறைவு மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை கிரிக்கெட்டால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பெறுகைத் திட்டம்

2006 இன் அரச பெறுகை வழிகாட்டியின் 4.2.1 இற்கு இணங்க மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது இலங்கை கிரிக்கெட்டின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) ஒவ்வொரு முகாமைத்துவ மட்ட வரையறைகளுடன் எஸ்எல்சீயால் முறையான ஜேஈ செய்முறை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் தீர்த்தல் மீது கட்டுப்பாடு இல்லாமை. |
| | (iii) நிலையான சொத்துக்களின் கணக்கீட்டு மீது கட்டுப்பாடு இல்லை. |
| (ஆ) களஞ்சிய முகாமைத்துவம் | முறையாக இருப்பு பதிவுகள் பேணப்படாமை மற்றும் முறையான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளாமை |
| (இ) காசோலை கொடுப்பனவு | உரிய தரப்பினர்களுக்கு கையளிக்காமல் கையில் காசோலைகள் இருந்தமை. |